# சர்வமத தூதுக் குழு ஒன்று யாழ். வர ஏற்பாடு


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 1௪ இதழ் 47
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28 — 03 — 1992


(யாழ்ப்பாணம்)
''பௌத்த குருமார் உட்பட சர்வமத உயர்மட்ட தூதுக்குழுவொன்றை நாம் மிகவிரைவில் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவருவோம்'' கொழும்பிலிருந்து யாழ். நகர்வந்து, விடுதலைப்புலிகள் பிரமுகர்களுடன் பேச்சுக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு நடவடிக்கை தாமதப்படுத்தப்படும்

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் மேலும் தாமதப்படுமென தற்போது தெரியவருகிறது.
இனப்பிரச்னை தீர்வு குறித்து தெரிவுக்குழுவின்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பிரஜைகள் குழுவுடன் ஆயர் குழு பேச்சு

(யாழ்ப்பாணம்)
கொழும்பிலிருந்து வந்த கத்தோலிக்க ஆயர்கள் குழு நேற்றுக்காலை யாழ். ஆயர் இல்லத்தில் யாழ். பிரஜைகள் குழுவினரை சந்தித்து உரையாடினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் பிரச்னையைத் தீர்ப்பதில் அரசு அக்கறை காட்டவில்லை

## ஆயர் குழுவிடம் புலிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்த்துவைப்பதில் சிறிலங்கா அரசு அக்கறைகாட்டவில்லை. எமது பிரச்னையைத் தீர்த்துவைக்காமல் அரசு இப்படியே இழுத்தடித்துக்கொண்டுபோனுல், தமிழீழ தனி அரசு உருவாகும் நிலை ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாது. இவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கப் பிரமுகர்கள் தென்பகுதியிலிருந்து யாழ். வந்திருந்த கத்தோலிக்க ஆயர் தூதுக்குழுவிடம் நேற்று தெரிவித்தனர்.**

விடுதலைப்புலிகள் பிரமுகர்களுக்கும் கத்தோலிக்க ஆயர் தூதுக்குழுவினருக்குமிடையே நேற்றுக்காலை, கோண்டாவிலில் உள்ள விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலகத்தில் பேச்சுக்கள் நடைபெற்றன.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், செயலாளர் நாயகம் திரு. யோகரட்ணம் யோகி, யாழ். மாவட்டத்தளபதி திரு. செந்தாளன், விடுதலைப்புலிகள் மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, செல்வி பாரதி ஆகியோரும், கத்தோலிக்க ஆயர் தூதுக்குழுவின் சார்பில், சிலாபம் ஆயர் மார்க்கஸ் பெர்ணண்டோ. கண்டி ஆயர் வியானி பெர்ணண்டோ, இலங்கை கத்தோலிக்க துறவிகள் சங்கத் தலைவர் வண. அல்பிரட் அலெக்சாண்டர்,

(4ம் பக்கம் பார்க்க)

### பிரபாகரன் விடயத்தில்

## இலங்கை இந்தியாவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாம்

(புதுடில்லி)
முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன், அவரது உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான் சம்பந்தப்பட்ட விலகாரத்தில் இலங்கை அரசு இந்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குமென தெரிவித்துள்ளது.

இலங்கை கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமை

[4-ம் பக்கம் பார்க்க]

### தெரிவுக்குழு யாழ். வராததால்

## எமது ஆலோசனைகளை தெரிவிப்பதில் பயனில்லை

**— அன்ரன் பாலசிங்கம்**

(யாழ்ப்பாணம்)
''நாடாளுமன்றத் தெரிவுக் குழு யாழ்ப்பாணம் வந்து தமிழ் மக்களின் அபிலாசைகளை கண்டும், கேட்டும் தெரிந்துகொள்ள மறுப்புத் தெரிவித்ததினுலேயே விடுதலைப்புலிகள் தமது ஆலோசனைகளை தெரிவுக்குழுவுக்குத் தெரிவிக்க விரும்பவில்லை.'' இவ்வாறு விடுதலைப்புலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

### தடைசெய்யப்பட்டுள்ள

## மருந்துகளின் தடையை நீக்க விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)
''வடபகுதிக்கு எடுத்துச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும் சில மருந்து வகைகளின் தடைகளை உடன் நீக்கும்படி நாம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.''

இவ்வாறு அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய யாழ். போதனு வைத்தியசாலையின் குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். போதனு வைத்தியசாலையில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு, மற்றும் வசதியீனங்கள் பற்றி கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நாம் நடாத்திய பேச்சுக்கள் பெரும்பாலும் பயனுள்ளதாக இருந்தபோதிலும் நாம் விடுத்த மேற்படி கோரிக்கையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிராகரித்துவிட்டார்கள்.

இதே நேரம் எமது வைத்தியசாலைக்கு அத்தியாவசிய

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். இல. வங்கி கிளைக்கு பணம் வந்து சேரவில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ். இலங்கை வங்கிக் கிளைக்கு கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக திரவப் பணம் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் அனுப்பப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது யாழ். இலங்கை வங்கிக் கிளையில் பணச் சுற்ளேட்டம் மந்தமாக இருப்பதாகவும் கூறப்படுகிறது. (மா

### க. பொ. த. (உ|த) விசேட பரீட்சை:

## விஞத்தாள்கள் நேற்று யாழ். வந்தன

[யாழ்ப்பாணம்]
கல்விப் பொதுத் தராதர [உயர்தர] பரீட்சைக்குரிய பத்து நாட்களுக்கான விஞத் தாள்கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இப் பரீட்சை ஏப்ரல் மாதம் 1-ம் திகதி தொடக்கம் யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

எஞ்சிய நாட்களுக்குரிய விஞத் தாள்கள் உரிய நேரத்தில் யாழ். மாவட்டத்துக்கு வந்து சேருமென யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். [சு]

## உடுகம்பொலவை காணவில்லையாம்

(கொழும்பு)
முன்னுள் பிரதி பொலிஸ் மாஅதிபர் பிரேமதாசா உடுகம்பொலவை காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னுள் பிரதி பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவை பொலிஸ் திணைக்களம் தேடி வருவதாகவும் பொலிஸ்மா

(4-ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர்கள் நேற்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
வடபகுதியிலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் நேற்றுக் காலை ஏழு மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை கல்வித் திணைக்களத்தை முற்றுகையிட்டு, ஒருநாள் மறியல் போராட்டம் நடாத்தினர்.

நாட்டின் ஏனையபகுதிகளில்

(4-ம் பக்கம் பார்க்க)

### தமிழகத்தில் தங்கியுள்ள

## இலங்கை தமிழ் அகதிகளை துரிதமாக திருப்பி அனுப்ப ராவ் இணக்கம்

(புதுடில்லி)
தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை தாயகத்திற்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையை துரிதப்படுத்தும்படி இந்தியாவை இலங்கை அரசு கேட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் திரு.பி.வி. நரசிம்மராவ் இதற்கு இணக்கம்தெரிவித்திருக்கிருர்.

இலங்கை கைதொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் நரசிம்மராவு

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**வல்லாரைக் குளிசை**

இயற்கை வல்லாரைச் சாற்றில் தயாரித்த Gotukola Capsules கிடைக்குமிடம்: எஸ். ரி. மெடிக்கல்ஸ் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-5995)

**பரீட்சை (ஆண்டு 6—4)**

*1991 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 28-03-92 சனி மு. ப. 7-00, மு. ப. 11-00க்கும் ஆண்டு 4 பரீட்சை 29-03-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00க்கும் நடைபெறும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6100]*

**வைத்தியம்**

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைக்காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்கள், பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-6030)

## இராசிபலன்

**28/03/1992**

**சனிக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 15)**

தசமி பி. இ. 3-42 வரை, உத்தராடம் மாலை 6-06 வரை, இராகுகாலம் காலை **9-13** முதல் **10-43** வரை, சுபநேரம் மாலை **3-13** முதல் **4-13** வரை சித்தயோகம்.

மேடம்: பணப்புழக்கம், புதுவாழ்வு, அசாத்திய துணிச்சல்.

இடபம்: அவமதிப்பு, அலைச்சல், தொழில் சிக்கல்.

மிதுனம்: வாய்வுத்தொல்லை வீண் சச்சரவு, வேதனை.

கடகம்: பகை அழியும். தொழில் சிறப்பு, வெற்றி.

சிங்கம்: ஆசை நிராசையாதல், ஊதிய உயர்வு, புகழ்.

கன்னி: வீண் விரயம், உறவினர் சீற்றம், சோம்பல்.

துலாம்: ஜீவன சிக்கல், குடும்ப கவலை, காரியதடை.

விருச்சிகம்: மனதில் மகிழ்ச்சி, வியாபார பலிதம், தான தர்மம்.

தனுசு: வாக்குக் கலகம், மனதில் சலனம், தவறுன நடத்தை.

மகரம்: தொழில் பாராட்டு இடமாற்றம், இனசன வரவு.

கும்பம்: பயனற்ற செயல், வார்த்தைகளில் விரோதம், மயக்கம்.

மீனம்: சகஊழியர் பாராட்டு, நண்பர் உதவி, தெய்வீக செலவு.

—ஜோஸ்யர்

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை**

**இராமநாதன் நுண்கலைக் கழகம் இசைக்கலைமணி/ நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினைப்**

## பயிலுவதற்கான அனுமதி 1991-92

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படவுள்ளன.

**தகமைகள்:**

(1) பரீட்சார்த்திகள் க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில்ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரத நாட்டியம் ஒரு பாடமாக சித்தி பெற்றிருத்தல் வேண்டும். கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்தி பெறுதவர்கள் வடஇலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4இல் சித்திபெற்றிருப்பதுடன் க. பொ. த. [உயர் தரம்] பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்வேண்டும்.

[2] பரீட்சார்த்தி 31-01-92 அன்று 15 வயதிற்குமேற்பட்டவராகவும் 25 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.


அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் [தேர்வுகள்], தேர்வுக்கிளை அவர்களிடமிருந்து நேரில் ரூபா 15க்கான பற்றுச்சீட்டு [பல்கலைக் கழக] செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23X10 செ. மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 15க்கான காசுக்கட்டளையை நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம் என பெற்று அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 30-04-1992.

பதிவாளர்

[எ 2004]

## 1-ம் வருட நினைவு நாள்



**கனகரத்தினம் குமாரச்சந்திரன்**

**(வள்ளல்)**

ஜனனம் *1968-12-14* வீரமரணம் *1991-03-28*

நிமிர்ந்து வாழ
சரிந்து போன
சரித்திரம்
ஒன்று.

கிளிநொச்சி. [சி-6077] **நண்பர்கள்.**

COMMERCIAL BANK

## வளமான சேமிப்பிற்கு வடக்கில் ஓர் புதிய பாதை

# உங்கள் வங்கி வழங்கும்

**வர்த்தக வங்கி சேமிப்பு சான்றிதழ்கள்**

**COMBANK SAVINGS CERTIFICATES**

வர்த்தக வங்கி சேமிப்புச் சான்றிதழ் உறுதிசெய்வது:

★ வைப்பிலிடும் போதே வளமான வட்டி
★ கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்
★ வட்டி மீதான பிடிப்புவரி விலக்கு (NO WITHHOLDING TAX)
★ முத்திரைத் தீர்வு விலக்கு (NO STAMP DUTY)
★ கடன் பெற இலகுவான பிணை உறுதி
★ நியமிக்கும் மறு உரித்தாளரிற்கு பணம்

மக்கள் சேவையில் முதன்மையான உங்கள் வங்கி வெகு விரைவில் வழங்கும்

## புத்தாண்டுப் பரிசுத் திட்டம்

நாடு பூராவும் உள்ள எமது கிளைகளில் ரூ. 500/-, ரூபா 1000/-, ரூ. 5000/- ரூ. 10000/- ஆகிய பெறுமதிகளில் 6, 12, 24 மாத காலங்களில் முதிர்வடையும் சான்றிதழ்களைப் பெறலாம்.

சான்றிதழுக்கான அட்டவணை:

| நீங்கள் கொடுப்பது | | | நீங்கள் பெறுவது |
|---|---|---|---|
| 6 மாதங்கள் | 12 மாதங்கள் | 24 மாதங்கள் | முதிர்ச்சியின் போது |
| 14.5 %ல் | 15.5%ல் | 16.5%ல் | |
| ரூபா 465/- | 433/- | 375/- | ரூ. 500/- |
| ரூபா 932/- | 866/- | 750/- | ரூ. 1000/- |
| ரூபா 4662/- | 4330/- | 3760/- | ரூ. 5000/- |
| ரூபா 9,325/- | 8659/- | 7519/- | ரூ. 10,000/- |

**எம்மை நாடுங்கள், சேமியுங்கள், வளருங்கள்**

# வர்த்தக வங்கி

**474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

## உங்கள் வெற்றி எங்கள் பலம்

தலைமையலுவலகம்:

**"கமர்ஷியல் இல்லம்"**

21, பிறிஸ்டல் வீதி,
கொழும்பு - 1

**எமது ஏனைய கிளைகள்:**

வெளிநாட்டுக் கிளை (கொழும்பு), நகரக்கிளை (கோட்டை), புறக்கோட்டை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, நாரஹேன்பிட்டி, பொரளை, நுகேகொடை, மகரகம, கட்டுநாயக்கா (FTZ), நீர்கொழும்பு, வென்னப்புவ, கண்டி, மாத்தளை கேகாலை, கலேவெல, குருநாகல், ஹிங்குராக்கொடை, ஹிக்கடுவ, காலி, மாத்தறை. (எ-2003)

# புலிகள் என்ற போர்வையில் 'வைரக் கடத்தல்' தமிழகத்தில் உண்மைநிலை அம்பலமாகின்றது

(சென்னை)

தமிழக காட்டுப் பகுதியில் புலிகள் என்ற போர்வையில் வெடிவைத்து புதையலைத் தோண்டும் திருட்டுக்கும்பல் ஒன்றின் நடவடிக்கை அம்பலத்திற்கு வந்துள்ளது.

தமிழ் நாட்டின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள நெல்லைமாவட்டத்தின் தெற்குப்புறத்திலுள்ள ''களக்காடு'' காட்டுப்பிரதேசம் மலைகளாலும் நீரோடைகளாலும், உயர்ந்த மரங்களாலும் சூழப்பட்ட, மனிதவாடையே இல்லாத ஒரு ''சூனியப்'' பிரதேசம். மேற்படி காட்டுப் பகுதியில் கடந்த பல மாதங்களாக தொடர்ந்து வெடிச் சத்தங்கள் கேட்டுக்கொண்டே இருப்பதாகவும் இது பற்றி இந்த மலையடிவார மக்களிடம் கேட்டபோது, விடுதலைப் புலிகள் இராணுவப் பயிற்சி பெறுவதாகவும் இது பற்றி யாரிடமும் கூற வேண்டாமென சிலர் கூறியதாகவும் கூறப்பட்டது.

இந்த காட்டுப்பகுதியின் நடுவில் வைரகற்கள் படிவங்கள் இருப்பது தெரியவந்த சிலர் கூலிக்கு ஆட்களை அமர்த்தி இப்பகுதியில் இரகசியமாக கூடாரமிட்டு வெடிவைத்துபெறுமதிமிக்க வைரக் கற்களை சேகரித்து லட்சக் கணக்கான பணத்தை சேகரித்து வந்தனர்.

இவர்களின் குட்டு ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் மூலம் தெரியவந்தது. பொலிஸார் இப்பகுதிக்குச்சென்று பார்த்த போது அங்கு விடுதலைப் புலிகள் இராணுவப் பயிற்சி பெறுவதற்கான எந்தவித அறிகுறியுமில்லையென்றும், மாறாக வெடிவைத்து தோண்டப்பட்ட பாரிய குழிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இந்த வேலையை பெரும் பாலும் இக்காட்டுப்பகுதியின் எல்லையில் இருக்கும் கேரள மாநிலத்தை சேர்ந்த பெரும் புள்ளிகளே செய்திருக்கக் கூடுமென அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தற்போது இக்காட்டுப் பகுதியில் 'வைர' ஆய்வாளர்கள் சோதனை நடாத்தி வருகிறார்கள்.

தற்போது தமிழகத்தில் புலிகளுக்கு எதிராக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் பல சமூகவிரோதச் செயல்களுக்கு பெரும் புள்ளிகள் (அரசை சார்ந்தவர்கள்) புலிகளின் பெயரை பயன்படுத்தி வருவதாகவும் இவ்வாறான பல செயல்களின் உண்மைநிலை தற்போது அம்பலமாகி வருவதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வி)

## தாமதமாக வேலைக்கு வருகின்ற அரச ஊழியர்கள் விடயத்தில் புதிய நடைமுறை அமுல்

(மானிப்பாய்)

அரச அலுவலகங்களுக்கு தாமதமாக வருகைதரும் அரச ஊழியர்கள் அதனை ஈடுசெய்யும் பொருட்டு மாலையில் சில குறிப்பிட்ட நேரம் வரை இனிமேல் பணிபுரிய வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அரசாங்க நிருவாக மாகாண சபைகள் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் மாகாண சபைகளின் செயலாளர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு 3 92 இலக்கமுடைய சுற்றறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இச்சுற்றறிக்கையில் மு. ப. 8-30 மணிக்கும் மு. ப. 9 மணிக்குமிடையில் எந்நேரத்திலும் அலுவலகத்திற்கு வருகை தரும் உத்தியோகத்தரொருவர் தாமதித்த நேரத்தை ஈடுசெய்யும் பொருட்டு பி. ப. 4-15 மணிக்குப் பின்னரும் (பி. ப. 4-45 மணி வரை) வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

மு. ப. 8-00 மணிக்கு 8-15க்கு மிடையில் வருகை புரியும் சிறு பணியாளர்கள் பி. ப. 4-45 மணிக்குப் பின்னர் தாமதித்த நேரத்தை ஈடுசெய்யும் பொருட்டு (பி. ப. 5-00) மணிவரையும் பணிபுரியவேண்டும்.

கர்ப்பம் தரித்த பெண் உத்தியோகத்தரொருவர் 5 மாதத்தின்பின் அரை மணித்தியாலம் தாமதமாக வருவதற்கும், வழக்கமான புறப்பாட்டு நேரத்திற்கு அரை மணித்தியாலம் முன்னதாக வேலைசெய்யும் இடத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கும் அனுமதிக்கப்படுவார். இச்சலுகை அப்பெண் உத்தியோகத்தர் தமது பிரசவ லீவைப் பெறும்வரை மட்டுமே வழங்கப்படுகின்றது. (71)

## மருதடி கொடியேற்றம்

(உடுவில்)

சரித்திரப்பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது.

ஏப்ரல் 13ம் திகதி புதுவருட தினத்தன்று தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்த உற்சவத்துடனும் விழா நிறைவுறும்.

விழா ஒழுங்குகளை மருதடி விநாயகர் ஆலய சபையினரும், தொண்டர் சபையினரும் மெமோறியல் ஆங்கில பாடசாலை சாரணர், செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோரும் கவனித்து வருகின்றனர். (109)

## 40 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்துவைப்பு

[புதுடில்லி]

இந்திய சிறைகளில் சுமார் 40 இலங்கை மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மீன்பிடி அமைச்சர் திரு. ஜோசப் மைக்கேல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்பரப்பில் மீன் பிடித்தபோது இவர்கள் இந்திய கடற்படையினரால்கைது செய்யப்பட்டு கடந்த மூன்று மாதமாக இந்திய சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை விடுவிப்பது தொடர்பாக இந்தியாவுடன் தொடர்ந்தும் பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் கூறினார். [சி]

## 15,000 ஆசிரியர் விரைவில்நியமனம்

[கொழும்பு]

புதிதாக 15,000 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான ஜனாதிபதியின் சிபார்சினை அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் கலாசார அலுவல்கள் தகவல்துறை சுதேசவைத்தியத்துறை அமைச்சர் திரு. டபிள்யூ. ஏ. எம். லொக்கு பண்டார நேற்று முன்தினம் காலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவிக்கையில் நாடு முழுவதுமுள்ளஅரசாங்க பாடசாலைகளில் 14,600 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாகவும் நாடு முழுவதிலுமுள்ள 9,800 அரசாங்க பாடசாலைகளில் மொத்தம் 1,82,008 ஆசிரியர்கள் இருக்க வேண்டும்என்றும்கூறினார். (ரி)

## வரட்சி பாதிப்பிற்கு தெற்கில் அரசு உதவி

(கொழும்பு)

தென் இலங்கையில் வரட்சியினால் 4,30,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென ஒரு கோடி ஐம்பது லட்சம் ரூபாவை அரசு ஒதுக்கியுள்ளது.

வரட்சி நிவாரண நடவடிக்கைகளுக்காக மேலும் 60 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது. (ரி)

## தொண்டர் நிறுவனங்கள் இராணுவத்திற்கு உதவி

(கொழும்பு)

யுத்தத்தில் பாதிக்கப்படும் இராணுவத்தினருக்கு தென் பகுதியிலுள்ள தொண்டர் நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் உதவிவருகின்றன.

பத்து லட்சம் ரூபா செலவில் நான்கு இராணுவ அதிகாரிகளுக்கு தொண்டர் நிறுவனமொன்றினால்கட்டப்பட்ட வீடுகள் நேற்று முன் தினம் கையளிக்கப்பட்டன.

## 8வது தமிழாராய்ச்சி மாநாடு தமிழகத்தில் நடத்த ஏற்பாடு

[சென்னை]

எட்டாவது 'உலகத் தமிழாராய்ச்சிமாநாடு' தமிழகத்தில் நடைபெறவுள்ளதாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா தமிழக சட்டசபையில் கூறியுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் முதல்வர் கூறினார்.

ஏழாவது தமிழாராய்ச்சி மாநாடு மொறீஸியசில்நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### குத்துச் சண்டை வீரர்

## மைக்டைசனுக்கு 6 வருட சிறைத் தண்டனை

[நியூயோர்க்]

முன்னாள் உலகக் குத்துச் சண்டை சாம்பியனான மைக்டைசனுக்கு ஆறுவருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அழகு ராணி ஒருவரைக் கற்பழித்த குற்றச் சாட்டிற்காக இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இத் தீர்ப்பு வழங்கப்பட்டது. கற்பழிப்புக்காக 10 வருடமும், தவறான நடத்தைக்காக 10 வருடமுமென தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் பின்னர் நான்கு ஆண்டு காலம் குறைக்கப்பட்டு இத்தண்டனைகள் ஒரே காலத்தில் ஆறு வருடமாக அனுபவிக்கப்படும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. [சி]

## கருத்தரங்கு இம்முறை இல்லை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தினரால் ஞாயிற்றுக்கிழமை தோறும் நடத்தப்படும் வாராந்தக் கருத்தரங்கு, தவிர்க்கமுடியாத காரணத்தால் இவ்வாரம் நடைபெறமாட்டாது. என விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுகழகம் அறிவித்துள்ளது.

## வர்மா கமிஷன் விசாரணை முடிவு

(புதுடில்லி)

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை நடத்திவரும் வர்மாக்கமிஷன் சாட்சியங்களை பதிவு செய்யும் பணியை முடித்துவிட்டதாக மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்தார்.

இக்கமிஷன் தனது அறிக்கையை வெகுவிரைவில் வெளியிடயிருப்பதாகவும் இணைஅமைச்சர் மேலும் அறிவித்தார். (மா)

## பாடசாலை அதிபர் உட்பட 13 தமிழர் கைது

[மட்டுநகர்]

மட்டக்களப்பில் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபரொருவர் உட்பட 13 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாவற்கொடிச்சேனை, ஊற்றுமடு. கரையாகண்டி, தாண்டியடி, கொத்தியாவலை, மண்டபத்தடி ஆகிய கிராமங்களில் இடம்பெற்ற தேடுதல் வேட்டையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் மாணவர்களும் அடங்குவர்.

## ஓய்வு பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர் உலகில் கடந்த 41 வருடங்கள் சேவையாற்றிய காரைநகரைச் சேர்ந்த ஆசிரியை திருமதி பரமேஸ்வரி கந்தையா ஓய்வுபெறுகிறார்.

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் கடந்த 31 வருடங்களாக இவர் ஆற்றிய சேவையை பாராட்டி மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், ஆசிரியர் திரு. மேகநாதன் தலைமையில் பாராட்டு விழா நடாத்தியுள்ளனர். (சி)

## மாணவர் உணவு முத்திரை

(மானிப்பாய்)

பெப்ரவரி மாதத்திற்குரிய மாணவர் மதிய உணவு முத்திரைகளும் கடந்தவருடம்91ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்குரிய மதிய உணவு முத்திரைகளும் 26ந் திகதி யாழ். சமூக சேவைத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன. (71)

## தவக்கால நற்சிந்தனை

பரிசேயனைப்போல வெளிவேடம் போடுபவர்களை அல்ல, இறைவனுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பிய ஆயக்காரனைப்போல நாம் மனத்தால் எம்மை உணர்ந்து, நாம் பாவி எங்கள் மேல் இரக்கமாயிரும் என்று எம்மைத் தாழ்த்திச் செபிக்க வேண்டும்.

- மோ. தார்சீசியஸ்

# தொழில்நுட்பக்கல்லூரி விஞத்தாள்களும் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி 89, 90, 91-ம் ஆண்டுக்கான இறுதிப் பரீட்சையில் முடிவுருத பாடங்களுக்கான விஞத்தாள்கள் நேற்று கல்வித் திணைக்கள அதிகாரிகளால் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

இப்பரீட்சை மீண்டும் 30-ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (சு)

## காணமல்போன மீனவருக்காக ஒருநாள் கடையடைப்பு

(சென்னை)

காணமல்போன மீனவர் தொடர்பாக ஒரு நாள் கடையடைப்பு நேற்று நாகபட்டினத்தில் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுறது.

இதேவேளையில் கோடிக்கரை அருகே பல சடலங்கள் காணப்பட்டதாகவும் இச்சடலங்கள் காணமல் போன மீனவருடையதுதாஞ என்பதை கண்டறியும் பொருட்டு சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கம், காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்க குருளைச் சாரணர், சாரணர், திரிசாரணர், சாரண ஆசிரியர்கள், குருளைச் சாரண ஆசிரியர்கள் உதவி மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் சாரணிய சம்பந்தப்பட்ட அனைவருக்குமான விசேட கூட்டம் 30-ம் திகதி திங்கட்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பிற்பகல் 3 30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள்.

### தமிழகத்தில் தங்கியுள்ள

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின் போது அகதிகள் விடயம் குறித்து வலியுறுத்திஞர்.

இதேவேளையில் 18,000 அகதிகளை உடன் வரவேற்க இலங்கைபரசு தயாராயிருப்தாகவும் இவர்களுக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

### நடைசெய்யப்பட்டுள்ள

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாகத் தேவைப்படும் மருந்து வகைகளை அனுப்புவதற்கும், இரத்த வங்கிக்கு தேவைப்படும் 5 கே. வீ. ஜெனரேட்டர் ஒன்றையும் உடன் கப்பல்களில் அனுப்புவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வி)

### தொண்டர் ஆசிரியர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டர் ஆசிரியருக்கு நிரந்தர நியமனம் அரசாங்கம் வழங்கியிருந்தபோதிலும் வடபகுதியில் கல்வி போதிக்கும் தொண்டர் ஆசிரியர்களுக்கு இதுவரை ஏன் நிரந்தர நியமனம் வழங்கவில்லை என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த மறியல் போராட்டம் நடாத்தப்பட்டது.

கல்வித்திணைக்களம் இதனுல் நேற்று முழுமையாக இயங்கவில்லை. அதிகாலை ஊழியர்கள் கந்தோரின் வெளியே நின்று விட்டுச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

தொண்டர் ஆசிரியர்கள் கல்வித் திணைக்களப் படிக்கட்டுகளில் அமர்ந்தார்கள். சரியாக 2 மணியளவில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியோடு மறியல் போராட்டம் முடித்து வைக்கப்பட்டது. (சு)

## கொழும்பிலும் பரீட்சை நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) விசேட பரீட்சைக்கு கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என கல்வி இலாகா அறிவித்துளது. (சு)

## 'ஈழகேசரி' நினைவுவிழா

(வட்டுக்கோட்டை)

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில் நல்லூர் கம்பன் கோட்டத்தில் கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் ஈழகேசரி நா. பொன்னையா அவர்களது 41வது நினைவு தின விழாவைக் கொண்டாடவுள்ளனர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிருர்.

யாழ். பல்கலைக்கழ தமிழ்த் துறை பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

இவ்விழாவில் 'தாளக் காவடி' என்னும் நாடகமும் இடம்பெறும். (139)

### உடுகம்பொலவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

முன்னுள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம்பொலவைத்திருந்த கடவுச்சீட்டை பறிமுதல் செய்யுமாறு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளரும், அவரை நாட்டைவிட்டு வெளியேருத வண்ணம் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் தேசிய புலனுய்வுப் பணியகத்திற்கும் மாளிகாவத்த நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தது தெரிந்ததே. (மா)

### தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி அறிக்கை மே மாத இறுதியில் அல்லது யூன் மாத முற்பகுதியிலேயே தயாரித்து முடியுமெனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

சில முக்கிய விடயங்களில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்தவே இக்காலதாமதமெனக் கூறப்படுகிறது. (சி-மா)

### யாழ். பிரஜைகள்குழுவுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பின்போது யாழ். மாவட்டத்திலுள்ள உணவுப் பற்ருக்குறை, மருந்துத் தட்டுப்பாடு, வங்கிகளின் நிதி பற்ருக்குறை, மின்சாரம் ஆகியவற்றை பிரஜைகள் குழு ஆயர் குழுவினருக்கு எடுத்துரைத்தார்கள். (மா)

# நாவற்குழி நன்னீர் ஏரிப்பகுதியில் மீன் பிடிப்பதற்கு தடை விதிக்குமாறு ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி நன்நீர் ஏரிப் பகுதியில் மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என தமிழீழ ஆய்வு நிறுவனம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் அ.துரைராசா தலைமையில் நேற்றுக் காலை மீன் வளர்ப்புத்திட்டம் பற்றி கருத்தரங் கொன்று நடைபெற்றது.

நாவற்குழி நன்னீர் பகுதியிலேயே பெரும்பாலன மீனினங்கள் இனப் பெருக்கத்தை மேற்கொள்வதால் இப்பகுதிகளில் மீன் பிடிப்பதன் மூலம் மீனினம் அழிந்து வருவதால்

மீன்பிடிப்பதை உடன் தடை செய்யவேண்டுமென்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் இந்தப் பகுதியில் அழிந்த நிலையில் இருக்கும் உப்பளத்தையும் தனியார்துறையினரிடம் கொடுத்து புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்றும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மேலதிக அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் உட்டபட யாழ். செயலக அதிகாரிகள் பலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டார்கள். (வி)

## ரயில்வே திணைக்களம் அதிகாரசபையாக மாற்றம்

(கொழும்பு)

''ரயில்வே திணைக்களம் வெகு விரைவில் அதிகார சபையாக மாற்றப்படவுள்ளதாகவும் இது தொடர்பான சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ரயில்வே திணைக்களத்திற்கு வருடாந்தம் 44 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். (க)

## பரீட்சை மோசடி கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பரீட்சை ஏற்கனவே கொழும்பில் நடைபெற்றபோது பரீட்சை எடுத்தவர்களில் சில மாணவர்கள் வடபகுதியில் நடக்கப் போகும் விசேட பரீட்சையிலும் தோற்றுவதற்காக முன்வந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தமக்கு அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லையென்று பரீட்சைத் திணைக்களத்திடம் முறையிட்ட நடவடிக்கை அம்பலத்துக்கு வந்துஅளது.

இம்மாணவர்கள் யாழ். மாவட்டத்தில் பிரபல பாடசாலையைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகிறது. [சு]

### சர்வமத தூதுக்குழு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடாத்திவிட்டு நேற்று மாலை கொழும்பு திரும்பிய கத்தோலிக்க ஆயர் குழுவினர் இவ்வாறு தெரித்தனர்.

சமாதான நல்லெண்ணத் தூதுக்குழு தொடர்ந்து வடக்குக்கு விஜயம் செய்து, தமிழ் மக்களின் தற்போதைய நிலைமைகளை அறிந்து செல்வது சமானத்துக்கான நல்ல சூழ்நிலைகளை உருவாக்கும் என்றும் ஆயர்குழுவினர் மேலும் தெரிவித்தனர். (வி)

### தமிழர் பிரச்சனையை

(1-ம் பககத் தொடர்ச்சி)

இலங்கை கத்தோலிக்க பொதுமக்கள் சபையின் தலைவர் திரு. நியூட்டன் பெர்ணண்டோ உட்பட ஏழு பேர் அங்கம் வகித்தார்கள்.

மேற்படி தூதுக் குழுவிடம் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்ததாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்தின் கதவுகளை எந்தநேரமும்திறந்துவைத்துக் கொண்டே இருக்கின்ருர்கள் ஆனுல் இலங்கை அரசு சமாதான முயற்சிகளைக் கைவிட்டு இராணுவ அணுகு முறையையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது.

போர் நிறுத்தத்துக்கும், சமாதானப் பேச்சுக்கும் விடுதலைப்புலிகள் தயாராக இருக்கின்ருர்கள். இதேநேரம் தமிழ் மக்களின் பிரச்னையை அரசு தீர்க்காமல் இழுத்தடித்துக் கொண்டிருந்தால், தமிழீழ தனி அரசு உருவாகுவது தவிர்க்கமுடியாததாகி விடும்.'' (வி)

### பிரபாகரன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ். பி. சவானுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோதே இந்த விவகாரம் குறித்து ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தார்.

### தெரிவுக்குழு யாழ்.

(1-ம் பககத் தொடர்ச்சி)

இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு யாழ்நகருக்கு வருவதற்கு மறுப்புத் தெரிவித்த பின்பு அவர்களிடம் எமது அரசியல் தீர்வு ஆலோசனைகளைத் தெரிவிப்பதில் எதுவித அர்த்தமுமில்லை.

இதை நாம் கத்தோலிக்க ஆயர் உயர் குழுவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளோம் என்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார். (வி)

## சுப்பர்சோனிக் என்ற பெயரில் கொழும்பில் மீண்டும் மர்மச் சத்தங்கள்

(கொழும்பு)

கொழும்புதெற்கில் கடந்த சில தினங்களாக மீண்டும் மர்மச் சத்தங்கள் கேட்டவண்ணமிருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீன யுத்த விமானங்கள் பயிற்சியிலீடுபடுத்தப்படுவதாலேயே இச் சத்தங்கள் கேட்பதாகவும் இவை நவீன சுப்பசொனிக் விமானமானபடியால் இச்சத்தங்கள் கேட்பதாக விமானப்படை கமாண்டர் விஜித தென்னக்கோன் தெரிவித்தார்

எனினும் இச்சத்தங்கள் குறித்து இதுவரை உண்மையான தகவல்கள் கிடைக்கவில்லை எனவும் கூறப்படுகிறது. (சி)

## மரண அறிவித்தல்

### இளையதம்பி சின்னத்துரை

புங்குடுதீவு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி சின்னத்துரை அவர்கள் 26-03-92 அன்று காலமாகிவிட்டார். அன்னுர், காலஞ்சென்ற இளையதம்பி கண்ணம்மா தம்பதிகளின் புதல்வரும், நாகமுத்து, பார்பதி ஆகியோரின் அன்புக்கணவரும், கலாரஞ்சினி, லோகதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும், திலகேஸ்வரியின் அன்பு மாமனுரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, கனகசபை, நமசிவாயம் (ஜேர்மன்), பொன்னம்மா, சின்னப்பிள்ளை, அன்னபூரணம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சுப்பையா, காலஞ்சென்ற விசுவலிங்கம், கந்தையா, சிவக்கொழுந்து, காலஞ்சென்ற பொன்னம்மா, நீலாம்பிகை (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனரும், ஐயம்பிள்ளை பொன்னுச்சி ஆகியோரின் மருமகனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் (28-03-92) 3-30 மணியளவில் யாழ் இந்துக்கல்லூரி அருகாமையிலுள்ள 699/2, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
கு. சந்திரன்
(கிராம அலுவலர் புங்-4)

699/2, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 6102)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office in Lanka under Licence Number B/10336/91.